ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# திருக்குறளில் உள்ள முன்னின்று கல்நின்றவர் எனும் தொடரை முன்வைத்து:

**ச.சற்குருநாதன்[1] & முனைவர் க.வெங்கடேசன்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)**

**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரி(த) வியாசர்பாடி,சென்னை -39.**

**[2]நெறியாளர், இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு, அ.கு.எண் – 604 407.**

**ஆய்வு நோக்கம்**

திருக்குறளில் படைச் செருக்கு எனும் அதிகாரத்தின் முதல் குறளில் (771) உள்ள கல் நின்றவர் எனும் தொடர் வெளிப்படுத்தும் உண்மைப் பொருளை நோக்கி இவ்வாய்வு பயணிக்கிறது. திருக்குறளை சங்கம் மருவிய கால நூல்களொடு வைக்கும் மரபிருந்தாலும் அவ்விலக்கியம் வெளிப்படுத்தும் சான்றாதரங்கள் தமிழரின் தொல்மரபை ஒட்டியுள்ளதை அக மற்றும் புறச்சான்றுகளோடு நிறுவுதல் இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக உள்ளது.

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்குறளின் பாடுபொருள் அறமாக இருப்பினும் தமிழரின் வாழ்வியலைத் தெளிவாக வெளிப்படுத்தும் நூலாக இது அமைந்துள்ளது. திருக்குறள் சுட்டும் ‘கல் நின்றவர்’ எனும் தொடர் பொதுவில் நாம் காணும் கல்வெட்டுகளுடன் கூடிய உருவங்கள் பொறிக்கப்பட்ட நடுகற்களை மட்டும் குறிப்பதல்ல. தமிழரின் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய தொல்லெச்சங்கள் என நாம் கருதும் கல்திட்டை, கல்பதுக்கை, நெடுங்கல், கற்குவை போன்ற புறச்சான்றுகளைக் கொண்டு மக்கள் வாழிடங்கள் சார்ந்து அவை காணப்படும் இடம், அவற்றின் அமைப்பு, மக்கள் வழிபட்டமுறைகள் குறித்த சங்க இலக்கியக் குறிப்புகளுடன் பொருத்திப் பார்த்து, அவற்றைக் குறட்பாக்களுடன் ஒப்பிட்டு , திருக்குறள் சுட்டும் ‘கல்’ என்பது வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய தொல்லெச்சங்கள் என்று நாம் குறிப்பிடுபவையே என்ற கருதுகோளை இவ்வாய்வு முன்வைக்கிறது.

**திறவுச் சொற்கள்** :- திருக்குறள் – படைச்செருக்கு –- கல்நின்றவர் – புற வாழ்க்கை - போர்முழக்கம் - நடுகல் - கல்பதுக்கை – கல்திட்டை – நெடுங்கல் – கற்குவை - நடுகல் அமைப்பு – அமைவிடம் – வழிபாடு – கடவுள் – தென்புலத்தார் – வசையிலா நிலம்.

திருக்குறள் தமிழர்களின் வாழ்வியலை, விழுமியத்தை வெளிப்படுத்தும் ஒப்பற்ற நூல். உலகப்பொதுமறை, அற இலக்கியம் என்ற பொதுக் கருத்துகள் இருப்பினும் தமிழருக்கே உரிய அகம்,புறம் என்ற இருவகை வாழ்வியலை சிறப்புற வெளிப்படுத்திய நூலாக இது திகழ்கிறது. அறத்தின் வழி பொருள் தேடி,காக்கும் வகை தேர்ந்து , இன்பத்தைத் துய்க்கும் வழியைக் காட்டுவதில் மற்ற எந்த நூலைக் காட்டிலும் இது தனித்து விளங்குகிறது. அறத்துப்பால், பொருட்பால் இரண்டும் பெருமளவில் புறத்தைப் பேசினாலும், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப்பெறுதல் ஆகிய அதிகாரங்கள் அக வாழ்வு பற்றியும் பேசுகின்றன. காமத்துப்பாலோ அகவாழ்வின் சுவைக்கு இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

அறம்சார்ந்த வாழ்க்கையை மட்டுமல்லாது படைமாட்சி, படைச் செருக்கு,புகழ் உள்ளிட்ட அதிகாரங்கள் புறத்திணை இலக்கணத்திற்கு இலக்கியம் காண்பது போல செய்திகளை அள்ளித் தருகின்றன. குறிப்பாக, தமிழர்தம் போர் மரபும், போரின்கண் வெற்றி, தோல்வியைக் கடந்து களமாடிய வீரர்கள் பெற்ற பெருமையும், பெருமிதமும் ஆய்வுலகின் செல்நெறிகளுக்கு வழியமைத்துத் தருகின்றன. அவ்வகையில், திருக்குறள் காட்டும் 'கல்நின்றவர்' குறித்த செய்திகளை முன்வைத்து இக்கட்டுரை உரையாடுகிறது.

**தமிழர் புறவாழ்வில் நடுகல்**

திருக்குறள் சுட்டும் கல்நின்றவர் எனும் தொடருக்குப் போரின்கண் இறந்து பட்ட வீரனின் நினைவைப் போற்றும் வகையில் எடுக்கப்பட்ட நடப்பட்ட கல் எனும் பொதுப்பெயரில் பொருள் கூறும் மரபே தமிழாய்வு உலகில் இருந்து வருகிறது. அதனை, வலியுறுத்தும் விதமாகவே, தொல்காப்பியம் தொடங்கி, சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம் எனப் பல்வேறு இலக்கண, இலக்கியங்களில் காணப்படும் செய்திகளை இவற்றுக்குச் சான்றாதாரமாகக் காட்டுவர். ஆனால், கல்நின்றவர் எனும் தொடர் சுட்டுவது எதனை? என்பது ஆய்வுக்குரியது. இதற்கு விடை தேடும் பணியை முதலில் தமிழகத்தில் கிடைத்துள்ள நடுகற்களைக் கொண்டு தொடங்கலாம். ஆய்வின் பொருட்டு அவற்றைக் கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்தலாம்.

1. ஊர் அல்லது நாட்டிற்கானப் போரில் இறந்தவர்களுக்கானவை.
2. ஆநிரை கவர்தல்/மீட்டல் போரில் இறந்தவர்களுக்கானவை
3. விலங்குகளுடன் போராடி இறந்தவர்களுக்கானவை
4. மன்னன் போரில் வெல்ல தம்மை பலியிட்டுக் கொண்டவர்களுக்கானவை

இதன்படி,தமிழகமெங்கும் கண்டறியப்பட்டுள்ள பல்வேறு நடுகற்கள் வகைப்படுத்தப்பட்டு, அதில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்தமைதி மற்றும் மன்னர்களின்

ஆட்சியாண்டு வரையறைப்படி காலம் கணிக்கப்பட்டு வரப்படுகிறது. இவ்வகையில், தமிழக நடுகற்களின் காலமாக பொ.ஆ.6 ஆம் நூற்றாண்டு முதலாக 12 ஆம் நூற்றாண்டு வரையானவை என வரையறுக்கப்படுகிறது. இச்செய்தி இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சக இணையதளத்தில் வெளியாகியுள்ள ஒருகட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. **INDIRA GANDHI NATIONAL CENTRE FOR THE ARTS- MINISTRY OF CULTURE,GOVT OF INDIA –Studying Interface: Herostones, Oral Traditions And The Pastoralists** (The herostones from Tamil Nadu fall roughly within the 6th to the 12th century A.D. A majority of these are still in formative stages.) இவ்வாறு இக்கட்டுரை குறிப்பிடுவதற்கான காரணத்தை நுணுகி ஆய்ந்தால் , தமிழகம் தவிர, ஆந்திர, கன்னடப் பகுதிகளில் கிடைக்கும் பல அடுக்குகள் உள்ள, உருவங்கள் பொறிக்கப்பட்ட நடுகற்களை மட்டுமே கருத்தில் கொண்டு கட்டுரையாளர் காலம் கணித்துள்ளதை உணரலாம். இக்கருத்திற்கேற்ப பல்லவர் காலம் முதற்கொண்டு பிற்கால நாயக்கர் காலம் வரையிலான கல்வெட்டுத் தொடர்களுடன் உருவங்கள் பொறிக்கப்பட்டவையாக உள்ள இந்நடுகற்கள் உள்ளன. முன்னர் கூறிய நான்கு வகைப்பாடும் இவற்றையே சுட்டி நிற்கும்.. இதன்வழி, காலத்தால் முந்தைய திருக்குறள் சுட்டும் கல்நின்றவர் என்ற தொடர் மேற்கூறப்பட்டவற்றைக் காட்டிலும் வேறானவற்றை உணர்த்துகிறது என அறியலாம்.

**தமிழர் மரபில் கல்நின்றவர் - வீரனின் போர்முழக்கம்**

தமிழர் மரபில் நடுகல்லுக்குரியவர் யார்? என்ற கேள்விக்கு விடையளிக்கும் வகையில்,

> **என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை**
>
> **முன்நின்று கல்நின் றவர்.**(குறள் எண்-771)

என்ற குறளை வள்ளுவர் படைத்துள்ளார் எனலாம். இக்குறள் ஒரு போர் வீரனின் எச்சரிக்கையாக, வீர முழக்கமாக உள்ளது. பகைவர்களே! என் தலைவனை எதிர்த்து நிற்காதீர்! ஏனெனில், அவனை எதிர்த்து போர் செய்தவர் யாரும் உயிருடன் மீண்டதில்லை. அவர்கள் அனைவரும் தங்கள் வீரமரணத்திற்காக கல்லாக நின்றுவிட்டார்கள் என்ற இப்போர்முழக்கம் தோற்றவர்களுக்காக நடுகல் எடுக்கப்பட்டதையும் சுட்டுகிறது. அவ்வகையில், நடுகல்லாய் நிற்கும் வீர்ர்கள் அனைவருமே வெல்வதற்காக மட்டுமல்லாது வெல்வதற்கு வாய்ப்பில்லை என்றபோதும் மானத்திற்காகப் போர் புரிந்து மடிந்துள்ளனர். வெற்றி அல்லது வீர மரணம் என்பதே தமிழ் வீர்ர் மரபாக இருந்துள்ளதை இதன்வழி அறிய முடிகிறது. இதனை,

> **விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்**
>
> **வைக்கும், தன் நாளை எடுத்து.** (குறள் எண்-776)
>
> **புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின், சாக்காடு**
>
> **இரந்து கோள்தக்கது உடைத்து.** (குறள் எண்-780)

என்ற இவ்விரு குறள்களும் போரில் எதிர்த்து நின்று விழுப்புண் படாத நாளை இழுக்கான நாளென்று வீரர்கள் கருதியதையும், வீரமரணத்தை எய்திய மறவனின் வீரம் அனைவராலும் புகழப்பட்டதையும், மரணம் எய்திய மாவீரனுக்காக மன்னவனும்

கண்ணீர் விட்டுக் கலங்கியதையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வண்ணம், மக்கள் மனதைவிட்டு நீங்காப் புகழுடைய வீர்ர்களை விண்ணுலகமும் பாராட்டி மகிழும் என்பதை

**நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்**

**போற்றாது புத்தே ளுலகு. (குறள் எண்-234)**

எனும் குறள் விளக்குகிறது. இவ்வாறு மக்களுக்காக இறந்த மாவீர்ர்களைப் போற்ற எடுக்கப்பட்ட நடுகற்கள் எவை? அவ்வாறு எடுக்கப்பட்ட கற்கள் உருவங்களுடன் இருந்தனவா? எனில், பல்லவர் காலத்திற்கு முந்தைய நடுகற்கள் எவற்றிலும் உருவங்கள் ஏதும் இல்லை. இவை உருவங்கள் இல்லாமல் எழுத்துடையனவாகவும், எழுத்துகள் இன்றியும் இருந்திருக்க வேண்டும் என்பதே உண்மையாகும். ஏனெனில், தமிழகத்தில் இதுவரைக் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் மிகப்பழமையானதாக, ’புலிமான் கோம்பை’ என்ற இடத்தில் உள்ள கல்வெட்டுகளையே அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**புலிமான் கோம்பை கல்வெட்டு**

புலிமான் கோம்பை கல்வெட்டுகள் உருவம் ஏதுமின்றி , குகைகளில் காணப்படும் தமிழிக் கல்வெட்டினைப் போன்றே துண்டுப்பாறைகளில் கிடைத்துள்ளன. அவற்றில் முதல் ஒன்றின் பொருள் தெளிவாக இல்லை.

இரண்டாம் கல்வெட்டு ’வேள் ஊர் அவ்வன் பதவன்’ என்ற பெயரையும் ,மூன்றாம்
















(படங்கள் மற்றும் கல்வெட்டுப்படி - *<u>முனைவர் மா.பவானி, உதவிப்பேராசிரியர், கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை அவர்களின் இணையதளப் பதிவு)</u>*

கல்வெட்டு 'பூசல் மாற்றில் இறந்துபட்ட வீரன் பேடுதீயன் அந்தவன்' எனவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. இவை கிடைத்த இடம் மக்கள் வாழிடங்களுக்கு வெளியே உள்ளதை அறியும் போது இவை அனைத்தும் வீரன் இறந்துபட்ட இடத்திலே, குறிப்பாகப் போர் நிகழ்ந்த இடத்திலேயே எடுக்கப்பட்ட கற்கள் எனக் கருத இடமுண்டு. இவை, பிற்காலத்தில் கிடைத்த நடுகற்களில் இருந்து வேறானவை. இம்முடிவை நாம் ஏற்கும் போது தமிழகத்தில் கிடைக்கும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கல்பதுக்கை, கல்திட்டை, குத்துக்கல், கற்குவை ஆகியவற்றையும் இவற்றோடு பொருத்திப் பார்க்க இயலும்.

**கல்பதுக்கை,கல்திட்டை, குத்துக்கல்/நெடுங்கல் , கற்குவைகள் வீரனுக்கானவையா?**

தமிழகத்தின் தொல்லெச்சங்களாகக் கிடைப்பவற்றுள் கல்பதுக்கைகள் குறிப்பிடத் தக்கவையாக உள்ளன. இவை, தமிழகம் எங்கும் பரவிக் கிடக்கின்றன. இவற்றின் அமைப்பை அகழாய்வில் கண்டறிந்துள்ளனர். இவை அனைத்தும் நிலத்திற்குள் சதுரம் அல்லது செவ்வக வடிவிலான குழிகளில், நாற்புறமும் பலகை போன்ற கற்களை நிறுத்தி அறைபோல அமைக்கப்பட்டுள்ளன. நிலத்திற்கு மேல் மக்கள் பார்வையில் காணும் வண்ணம் இவ்வறையைச் சுற்றி பெருங்கற்களை வட்டமாக அமைக்கப்பட்டு, கல்பதுக்கை உள்ளதை குறிக்கும் தனித்த அடையாளத்துடன் இவை காணப்படுகின்றன.

கற்களால் அமைக்கப்பட்ட அறையில் புதைக்கப்படும் வழக்கத்தால், இன்றுவரை இறந்தவர்களை புதைக்கும் இடத்தைக் கல்லறை என்ற பெயராலேயே மக்கள் சுட்டுவதைப் இத்துடன் பொருத்திப் பார்க்க இயலும். அவ்வகைக் கல்லறைகளில் இறந்தவர் உடல் நேரடியாகப் புதைக்கப்படாமல் தாழி எனப்படும் பெரும் பானைகளில் இட்டு புதைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் உடலுடன் ஆயுதங்களும் வைக்கப்பட்டு உள்ளதை அகழாய்வில் கண்டறிந்துள்ளனர்.. அவர்களுக்காக வைக்கப்பட்ட மட்கலன்களில் நெல் போன்ற உணவு வகைகளும் கிடைத்துள்ளன. இவ்வகையில், பொருந்தல் என்ற இடத்தில் அகழாய்வு நடத்திய பேராசிரியர் கா.இராஜன் அவர்கள் அங்கு கிடைத்த மட்கலனில் **'வய்ர'** என்ற தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளதையும், அக்கலனுக்குள் இருந்த நெல்மணிகள் பொ.ஆ.மு. 490 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்பதையும் அறிவியல் அடிப்படையில் நிறுவியுள்ளார். இறந்தவர் உடலுடன் ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளதை நோக்கும் போது புதைக்கப்பட்டவர் போரில் இறந்தவர் என்பதையும்,அதனால், அவருடைய ஆயுதங்களும் அவருடனே புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருதுகோள் தவறாகாது. இதன்வழி, கல்பதுக்கைகள் அனைத்தும் இயற்கையாக இறந்தவர்களுக்காக அல்லாது, போரில் இறந்துபட்டவர்களுக்காக அமைக்கப்படிருக்கலாம் எனத் தெரிகிறது. இதனை, உறுதிப்படுத்தும் வகையில் சென்னைக்கருகில் உள்ள திருப்போரூர்

மலைப்பகுதி மற்றும் அங்கிருந்து ஒரு சில கி.மீ தொலைவில் உள்ள சிறுதாவூர் சமவெளிப் பகுதிகளிலும் ஒரே இடத்தில் பல கல்பதுக்கைகள் காணப்படுகின்றன. இவை போர்க்களத்தில் இறந்த வீர்ர்களுக்காக அங்கேயே எடுக்கப்பட்ட கல்பதுக்கைகளாக இருக்கக் கூடும்.



**சிறுதாவூர் சமவெளி (செங்கற்பட்டு மாவட்டம்) திருப்போரூர் குன்று**

**புறநானூற்றில் கல்பதுக்கை**

உறையூர் இளம்பொன் வாணிகனார் என்ற புலவர் பாடிய

பரலுடை மருங்கின் **பதுக்கை** சேர்த்தி,
மரல் வகுந்து தொடுத்த செம் பூங் கண்ணியொடு,
அணி மயில் பீலி சூட்டி, பெயர் பொறித்து,
இனி நட்டனரே, கல்லும்; கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது,
இன்றும் வரும்கொல், பாணரது கடும்பே? (புறநானூறு பாடல்எண் – 284)

எனும் பாடல் பரல்கற்கள் நிறைந்த இடத்தில் பதுக்கை அமைக்கப்பட்டு, மலர்மாலையுடன் மயிற்பீலிகள் சூட்டி, வீரனின் பெயர் பொறித்து கல் நட்ட வழக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஆநிரை மீட்டல் போரில் இறந்து பட்ட செய்தியைக் கூறும் இப்பாடலின் வழி வீரனுக்காகக் கல்பதுக்கை அமைக்கப்பட்டது உறுதியாகிறது. மேலும், உருவமற்ற பெயர் மட்டுமே பொறிக்கப்பட்ட கல்லை நடும் வழக்கம் இருந்ததற்கான இலக்கியச்சான்றாக இப்பாடல் உள்ளது. இப்பாடலுக்குப் புறச் சான்றாக புலிமான்கோம்பை நடுகற்கள் விளங்குவதை அறிய முடிகிறது.

கல்பதுக்கைகள் நிலத்திற்கடியில் காணப்படுவதைப் போன்றே கல்திட்டைகள் என்பவை நிலத்திற்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள கல்லறைகளாக உள்ளன. இவை பெரும்பாலும் குன்றுகளில் காணக் கிடைக்கின்றன. இவை தவிர, கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக வட்டமாக அடுக்கி உருவாக்கப்பட்ட கற்குவைகளும்,மிகப் பெரியளவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள நெடுங்கல் அல்லது குத்துக் கற்களும் வீரனுக்குரியனவாகவே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**அகநானூற்றில் நெடுங்கல்**

புறநானூற்றைப் போலவே தமிழர் வரலாற்றை மிகுதியாக எடுத்துரைக்கும் அகநானூற்றின் 269 ஆம் பாடலில்

ஏறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ **நெடுங்கல்**
அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண் டறுத்த ஆர்நார் உரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண் டார்ப்பச் சூட்டிக் கழற்கால்

இளையர்பதிப் பெயரும் அருஞ்சுரம் (அகநானூறு-பாடல் எண் -289)
மதுரை மருதனிள நாகனார். என்ற புலவர் தலைவன் செல்லும் வழியைக் குறிப்பிடும்போது ஆநிரைகளுக்கான கரந்தைப் போரில் இறந்துபட்ட வீரனுக்காக நடப்பட்ட நெடுங்கல்லின் தோற்றத்தையும் அதனை மக்கள் மலர்தூவி வழிபட்டதையும் விளக்கியுள்ளார்.



**நெடுங்கல் – (ஆறகளூர் வெங்கடேசன் அவர்களின் இணையப் பதிவு)**



**கல்திட்டை – கூவத்தூர்(வீரராகவபுரம்-செங்கற்பட்டு மாவட்டம்)**

**புறநானூறு காட்டும் கடவுள்**

இறந்த வீரர்களுக்கான கற்கள் தெய்வமாகப் போற்றி வழிபடப் பட்டுள்ளதை அகநானூற்றைப் போலவே புறநானூறும் உறுதிப்படுத்தியுள்ளது.

அடலகுந் துப்பின்................
குரவே தளவே குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ
டிந்நான் கல்ல துணாவு மில்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே. (புறம்.பாடல் எண் – 335)

மாங்குடி கிழார் என்ற சங்கப்புலவர் பாடிய மேற்காணும் பாடலில், குறிஞ்சிப்பாட்டிலும் குறிப்பிடப்படுகின்ற குரவம், தளவம், குருந்தம், முல்லையைக் காட்டிலும் சிறந்த பூக்கள் இல்லை என்ற தமிழ் மரபு சுட்டப்படுகிறது. இவ்வகையில், வரகு,தினை,கொள்,அவரை ஆகிய உணவு வகைகளும், துடியன், பாணன், பறையன், கடம்பனென்ற நால்வகைக் குடிகளும் சுட்டப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் மேலாக, பகைவர்களின் களிற்றினை வீழ்த்தி, பின்னவரெல்லாம் நெல்தூவி வழிபடும் கல்லாக நின்ற வீரனைக் காட்டிலும் சிறந்த கடவுள் இல்லவே இல்லை என்பது உறுதிப்படுத்தப் படுகிறது.

**திருக்குறளில் தென்புலத்தார்**

தமிழர் மரபினை விதந்தோதும் வள்ளுவரும் வழிபடுதற்குரிய முதன்மைக் கடவுள் தென்புலத்தாரே எனும் கருத்தை வலியுறுத்தும் வகையில்,

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான், என்று ஆங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை. (குறள் எண்.43)

எனும் குறளைப் படைத்துள்ளார். இதன் பொருளை நோக்கின், தென்புலத்தார்), தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும் என்று மு.வரதராசன் பொருள் கூறுகிறார்.இதன்வழி, இல்வாழ்வானின் கடமைகளாகச் சுட்டப்படும் ஐந்து ஒழுக்கங்களில் தெய்வத்தை வழிபடுதலைக் காட்டிலும் முதன்மையானது கல்லாகிவிட்ட இறந்து பட்ட முன்னோரை வழிபடுதல் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

**வீரர் விரும்பிய புகழ்**

நாட்டைக் காப்பதையும், நாட்டுக்காக வீழ்வதையும் தமிழ் மண்ணில் வாழ்ந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் விரும்பி ஏற்றுள்ளனர். போர்க்களத்திற்கு நேரே செல்லவில்லையாயினும் நாட்டைக் காக்க தன் இல்லத்தில் உள்ள ஒவ்வொரு ஆண் மகனும்செல்ல வேண்டும் என்பதில் பெண்களும் உறுதியாக இருந்துள்ளனர். போரில் வென்றானோ, இல்லையோ யாருக்கும் அஞ்சாத , புறங்கொடாத வீரனையே தாய்,மனைவி,மகள் என அனைத்து நிலைப் பெண்களும் விரும்பியுள்ளதைப் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள்,
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து, மாறினன்' என்று பலர் கூற,
'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்
முலை அறுத்திடுவென், யான்' எனச் சினைஇ,
கொண்ட வாளொடு படு பிணம் பெயரா,
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறு ஆகிய
படு மகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே! (புறம் பாடல் எண்.278)

காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய இப்பாடல், மரணத்தை எதிர்நோக்கும், முதிய தாயனவள் தன் மகன் புறமுதுகிட்டான் என்பது உண்மை என்றால்,அவனுக்குப் பாலூட்டிய மார்பையே அறுத்துக் கொள்வேன் என்று சூளுரைத்து, போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் உடல்களைத் துழவித் தேடி, உடல் சிதைந்து கிடக்கும் தன் மகன் உடலையும் காண்கிறாள். அப்போது, இறந்து விட்டான் என்ற கொடுந்துன்பத்தைக் காட்டிலும் வீரனாக இறந்தான் என்பதைக் கண்டு, அவனை ஈன்ற பொழுதினும்

பெரிதும் உவந்தாள் என்பது கல்லெடுக்க வேண்டிய வீரத்தின் பெருமையை விளக்கி நிற்கிறது.

**கல்லாய் நின்றவர் இல்லா நிலம்**

ஈன்ற பொழுதினும் தாயும் பெரிதுவக்கும் மக்கள் பிறந்து, வளர்ந்து,செயலற்று மடிந்த வேடிக்கை மனிதர்கள் இல்லை. அவர்கள் போருக்குப் புறங்கொடாத வீரர்கள். போரின் காரணமாக நெடுங்கல்லாக நின்றவர்கள். பதுக்கைகளிலும், திட்டைகளிலும் புதைக்கப்பட்டவர்கள். இவ்வகையான வீரர்கள் இல்லாத நாடு புகழடையாது . வளமின்றி, பயனிலாது, பெருமை குன்றி இழித்துரைக்கப்படும் என்ற கருத்தை

வசை இலா வண் பயன் குன்றும்-இசை இலா
யாக்கை பொறுத்த நிலம்.(குறள் எண்- 239)

எனும் குறள் வழி வள்ளுவரும் இடித்துரைக்கிறார். வீரர்களின் நிலம் எனப் புகழ்தற்கு அடையாளமான சின்னங்கள் ஏதுமின்றி எளியவரைத் தாங்கும் நிலம் புகழ் பெறாது. குற்றமற்ற நற்பயன் எதனையும் பெற இயலாது. ஒருவேளை மக்கள் கூட்டம் அங்கு வாழ்ந்திருப்பினும் மற்றவர்களால் இழித்துரைக்கப்படும் என்பதை உட்பொருளாகக் கொள்ளலாம்.

**நிறைவுரை :**

தமிழர்கள் வாழ்வு போரும் காதலும் நிறைந்ததாக இருந்துள்ளது. தங்கள் வழிபடு கடவுளாக போரில் இறந்துபட்ட வீரர்களையே இல்வாழ்வினர் வழிபட்டு வந்துள்ளனர். அவர்களின் வழிபாட்டுமுறை முன்னோர்களின் நினைவிடங்களாகிய கற்களால் அமைக்கப்பட்ட கல்பதுக்கை,கல்திட்டை, நெடுங்கல், கல்குவை என்ற பரிணாமத்தில் நடுகல்லாக வளர்ந்து வந்துள்ளது. ஆகவே, வள்ளுவரின் கல்நின்றவர் எனும் தொடர் பிற்காலத்தைச் சார்ந்த உருவங்களுடனான நடுகல்லைக் காட்டிலும் , உருவம் இன்றி கற்களால் அமைக்கப்பட்ட பெருங்கற்காலச் சின்னங்கள் என்றும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலச் சின்னங்கள் என்றும் கூறப்படும் அனைத்து நினைவுச் சின்னங்களையும் குறித்து நிற்கிறது எனத் தீர்மானிக்கலாம்.

**உதவி நூல்கள்**

1. திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், ஜூலை.2009
2. திருக்குறள் மு.வ. உரை, கழக வெளியீடு, செப்டம்பர் 1994
3. **Studying Interface: Herostones, Oral Traditions And The Pastoralists**, **Article by Ajay Dandekar INDIRA GANDHI NATIONAL CENTRE FOR THE ARTS- MINISTRY OF CULTURE,GOVT OF INDIA**
4. ஆவணம் இதழ்-17,தமிழகத் தொல்லியல் கழகம்,தஞ்சாவூர்,2006
5. ஆவணம் இதழ்-29,தமிழகத் தொல்லியல் கழகம்,தஞ்சாவூர்,2018
6. மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம் – 5, வீ.அரசு.இளங்கனி பதிப்பகம்,2014

7. திருக்குறள் நீதி இலக்கியம், க.த.திருநாவுக்கரசு, சென்னைப்பல்கலைக் கழகம் ,1977
8. சங்ககால வரலாற்று ஆய்வுகள், மயிலை.சீனி.வேங்கட சாமி,சாரதா மாணிக்கம் பதிப்பகம்,2010
9. புறநானூறு, அ.மாணிக்கனார் உரை வர்த்தமானன் பதிப்பகம், 1999
10. அகநானூறு, அ.மாணிக்கனார் உரை வர்த்தமானன் பதிப்பகம், 1999
11. குறிஞ்சிப்பாட்டு, அ.மாணிக்கனார் உரை வர்த்தமானன் பதிப்பகம், 1999

**இணைய தளப்பக்கங்கள்**

1. https://www.tagavalaatruppadai.in/inscriptions
2. https://www.tamilvu.org/
3. https://ignca.gov.in/studying-interface-herostones-oral-traditions-and-the-pastoralists/